25.01.16

தினமணி

**இன்றைய வேளாண் செய்திகள்**

## அதிகரிக்கும் செயற்கை முறையிலான பசுக்கள் கருத்தரிப்பு



தமிழகத்தில் நாட்டு மாடுகளின் எண்ணிக்கை குறைந்ததால், செயற்கை முறையில் பசுக்களைக் கருத்தரிக்கும் முறை அதிகரித்துள்ளதாகத் தெரிய வந்துள்ளது.

முன்பெல்லாம் தமிழகத்தின் அனைத்துக் கிராமங்களிலும் காளை மாடுகள் தனியாக வளர்க்கப்படும். அந்தக் காளைகள், பால் வியாபாரம் செய்யும் சிறு விவசாயிகளால் வளர்க்கப்படும் பசுக்களுடன் இனப் பெருக்கத்துக்காக விடப்படும். இவ்வாறு இயற்கையான முறையில் இனப் பெருக்கமும், பால் சுரப்பும் நிகழ்ந்து வந்தது. சென்னை மாநகரில்கூட திருவல்லிக்கேணி பகுதியில் சிறு பால் பண்ணைகள் அதிகம்இருந்தன.

காளைகளை வைத்து சிறிய அளவில் இனப் பெருக்கம் செய்வதற்கான இடங்களும் இருந்தன. ஆனால், இப்போது அந்த நிலை முற்றிலும் வழக்கொழிந்துவிட்டதாகவும், அனைத்து பால் பண்ணைகளிலும் செயற்கையான முறையில் இனப் பெருக்கமும், மருந்துகள் செலுத்தி பால் சுரப்பை அதிகரிக்கும் தொழில்நுட்பமும் பெருமளவு பயன்படுத்தப்படுவதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

குறைந்துவரும் இயற்கை முறை: தமிழகத்தில் ஜல்லிக்கட்டு போட்டிகளுக்கு தடைவிதிக்கப்படுவதால், காளை மாடுகள் இறைச்சிக்கு அனுப்பப்படுகின்றன. இதனால், இயற்கையான கருத்தரிக்கும் முறை குறைந்து, பசுக்களுக்கு ஊசி மூலம் விந்தணுக்கள் செலுத்தப்படுகின்றன. இதனால், அந்தந்த மாவட்டங்களில் உள்ள கால்நடை மருத்துவமனையில் சேகரிக்கப்பட்ட நாட்டு மாடுகளின் விந்தணுக்கள் குறைந்து வருகின்றன. எனவே, பால் கறவையை அதிகரிக்க இப்போது வெளிநாடுகளில் இருந்து ஜெர்ஸி காளைகளின் விந்தணுக்கள் வாங்கப்படுகின்றன. அந்த விந்தணுக்கள் வாங்கப்பட்டு, கலப்பின முறையில் செயற்கையாகக் கருத்தரிக்கும் முறை கையாளப்பட்டு வருகிறது. இதன் மூலம் புதிய இனம் உருவாகிறது, மேலும், பண்ணைகளுக்கு அதிகப்படியான பாலையும் பசுக்கள் அளிக்கின்றன. இன்னும், சில பண்ணைகளில் பசுக்களின் கழுத்தில் ஊசியைக் செலுத்தி அதன் ரத்தத்தை பாலாக்கும் முயற்சியும் கண்டறியப்பட்டுள்ளது.

பாலின் வகைகள்: பால் ஏ1, ஏ2 என இண்டு வகைகளாகப் பிரிக்கப்படுகிறது. உலகிலுள்ள அனைத்து பாலூட்டிகளும் இயற்கையாக ஏ2 வகையான பாலையே சுரக்கின்றன. மனித இனத்தின் தாய்ப்பாலும் இந்த ஏ2 வகையைச் சேர்ந்ததாகும். இயற்கையாக உருவாகும் இவ்வகையான பாலைத்தான் மனிதர்களால் செரிக்க இயலும். ஆகவே, இதே வகை பாலை சுரக்கும் பசுவின் பாலை நாம் பயன்படுத்த ஆரம்பித்தோம். ஆனால், பால் வியாபாரம் உலகமயமான பிறகு, ஐரோப்பாவில் அதிகமாகப் பால் கறக்கும் மாடுகளை மட்டுமே தேர்வு

செய்து, அவற்றை மட்டுமே இனப் பெருக்கம் செய்ய அனுமதிக்கப்பட்டது.

மரபணு மாற்றத்துக்குப் பிறகு: பால் கறக்கும் மாடுகள் தேர்வு செய்யப்பட்டதால், இவ்வகை மாடுகளில் மரபணு மாற்றம் ஏற்பட்டது. இதன் விளைவாக, ஏ1 என்ற பால் வகை உருவானது. சுவையற்ற இப்பால் உடலுக்குத் தீங்கு செய்யக்கூடியது. சர்க்கரை நோய், புற்றுநோய் போன்ற நோய்கள் வருவதற்கு இந்த ஏ1 வகை பாலும் ஒரு முக்கியக் காரணமாகும். குழந்தைகளுக்கு இந்த ஏ1 வகை பாலை செரிக்கும் ஆற்றல் இல்லை. இந்தப் பால் நோய் எதிர்ப்பு சக்தியை வலுவிழக்க செய்யும் என இயற்கை விவசாய ஆர்வலர்கள் தெரிவிக்கின்றனர். இதுகுறித்து தமிழ்நாடு கால்நடை ஆராய்ச்சிப் பிரிவு மருத்துவர் ஒருவர் கூறியதாவது:

ஒரு பசு பால் சுரக்க வேண்டுமென்றால் அது கன்று ஈன்று இருக்க வேண்டும். அந்தக் கன்றைப் பார்க்கும்போது தாய் மாட்டுக்கு இயக்குநீர் (hormone) சுரந்து அது பாலை சுரக்கத் தூண்டும். ஆனால், இது பல மாடுகள் இருக்கும் பண்ணையில் சாத்தியமில்லை. ஆகையால், மாட்டுப் பண்ணையாளர்கள் செயற்கையாக இயக்குநீர்களை மாட்டின் உடம்பில் ஊசியின் மூலமாகச் செலுத்தி பால் சுரக்க வைக்கின்றனர்.

இவ்வாறு செய்வதால் மாட்டின் பாலிலும் இந்த இயக்குநீரின் அளவு அதிகமாக இருக்கிறது. இந்த இயக்குநீரின் பெயர் ஈஸ்ட்ரோஜென் (Estrogen). இது பெண்ணிய இயல்பைத் தூண்டும் இயக்குநீராகும். இந்த ஈஸ்ட்ரோஜென் கலந்த ஏ1 பாலை அருந்தும் பெண் குழந்தைகள் சிறு வயதிலேயே பூப்படைகிறார்கள். தமிழகத்திலுள்ள அனைத்து நாட்டு மாட்டினங்களும் ஏ2 பாலை சுரக்கக் கூடியவை. இவை பாலை குறைந்த அளவே சுரந்தாலும், அது நமது உடலுக்கு எந்தவிதத் தீங்கையும் உண்டாக்குவதில்லை என்றார் அவர்.

**ஜெர்ஸி பசுக்கள் ஆதிக்கம் செலுத்த...**

தமிழகத்தில், நாட்டு மாடுகளின் சாணத்தில் இருந்து பெறப்படும் பொருள்களின் மூலத்திலிருந்தே பூச்சிக்கொல்லி, உரம், பஞ்சகாவியா போன்ற இயற்கை விவசாயத்துக்குத் தேவையானவற்றை உற்பத்தி செய்ய முடியும். ஆனால், ஐரோப்பிய இனமான ஜெர்ஸி வகை மாடுகளின் சாணத்திலிருந்து உற்பத்தி செய்யப்படும் உரங்கள், பூச்சிக்கொல்லி மருந்துகள் பயன் தராது. ஐரோப்பியர்கள் இயற்கை விவசாயத்துக்கு உதவும் மாட்டினங்ககளை அழிப்பதற்காக, இந்தியா முழுவதும் வெண்மைப் புரட்சி என்ற திட்டத்தைச் செயல்படுத்தி, கிராமங்களுக்குச் சென்று ஜெர்ஸி பசுக்களை விநியோகித்தனர். இதனால், வட மாநிலங்களில் படிப்படியாக நாட்டு மாடுகள் அழிந்தேவிட்டன.

ஆனால், தமிழகத்தில் மட்டும் ஏறு தழுவுதல் (ஜல்லிக்கட்டு) என்ற வீர விளையாட்டு இருந்ததால் காளைகள் காப்பாற்றப்பட்டு வந்தன. எனவே, தமிழகத்திலும் ஜெர்ஸி பசுக்களின் ஆதிக்கத்தைக் கொண்டு வர வேண்டும் என்பதற்காகவே, ஜல்லிக்கட்டுக்கு தடை வாங்கப்பட்டுள்ளதாக இயற்கை வேளாண் ஆர்வலர்கள் கூறுகின்றனர்.

## இன்று மழைக்கு வாய்ப்பு

தமிழகம், புதுச்சேரியில் திங்கள்கிழமை மழை பெய்ய வாய்ப்புள்ளது என சென்னை வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது.

இதுகுறித்து மைய அதிகாரிகள் கூறியதாவது: வங்காள விரிகுடா கடல் பகுதியிலிருந்து, நிலம் நோக்கி வரும் காற்றின் மேலடுக்கில் குறைந்த காற்றழுத்தத் தாழ்வுப் பகுதியும், மாலத்தீவு முதல் லட்சத் தீவு வரையிலான பகுதியில் காற்றின் மேலடுக்குச் சுழற்சியும் காணப்படுகிறது. இதன் காரணமாக, அடுத்து வரும் 2 நாள்களுக்கு தென் கடலோர மாவட்டங்களில் ஒரு சில இடங்களில் பலத்த மழைக்கு

வாய்ப்புள்ளதுஎன்றார்.

**சாலைகளுக்காக கையகப்படுத்தப்பட்ட விவசாய நிலங்களுக்கு கூடுதல் இழப்பீடு: மத்திய அரசு உத்தரவு**

நெடுஞ்சாலை கட்டமைப்புக்காக கையகப்படுத்தப்பட்ட விவசாய நிலங்களுக்கு புதிய சட்டத்தின்படி கூடுதல் இழப்பீடு வழங்க வேண்டும் என உத்தரவிடப்பட்டுள்ளதாக மத்திய அரசு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

விவசாயிகளுக்கான இழப்பீட்டுத் தொகை, பழைய சட்டத்தின்படி நிர்ணயிக்கப்பட்டிருந்தாலும், புதிய சட்ட விதிகளின்படி நியாயமான இழப்பீடு வழங்க வேண்டும் என மத்திய அரசு அறிவுறுத்தியுள்ளதாகத் தெரிகிறது.

கையகப்படுத்திய விவசாய நிலங்களுக்கு கூடுதல் இழப்பீடு வழங்க மத்திய அரசு நடவடிக்கை எடுத்து வருவதாக நெடுஞ்சாலைப் போக்குவரத்து துறை அமைச்சர் நிதின் கட்கரி அண்மையில் கூறியிருந்தார்.

குறிப்பிட்ட தொகை கொடுத்து கையகப்படுத்துவது என கடந்த ஆண்டு ஜனவரி 1-ஆம் தேதிக்கு முன்பு இழப்பீடு அளவு நிர்ணயம் செய்யப்பட்டு, ஆனால், நடைமுறையில் கையகப்படுத்தப்படாமல் இருக்கும் நிலங்களுக்கும் புதிய கூடுதல் இழப்பீட்டு விதி பொருந்தும் என்றும் நிதின் கட்கரி தெரிவித்திருந்தார்.

இதுகுறித்து நெடுஞ்சாலைப் போக்குவரத்து அமைச்சகத்தின் மூத்த அதிகாரி ஒருவர் கூறியதாவது:

நியாயமான இழப்பீட்டு உரிமை, நிலங்களைக் கையகப்படுத்துவதில் வெளிப்படைத்தன்மை, மறுவாழ்வு நடவடிக்கை உள்ளிட்ட பிரிவுகளைக் கொண்ட நிலம் கையகப்படுத்துதல் சட்டம் கடந்த 2013-ஆம் ஆண்டில் இயற்றப்பட்டது.

இந்நிலையில், இதற்கு முந்தைய சட்டத்தின்படி நிலங்களைக் கையகப்படுத்துவதாக நிர்ணயம் செய்யப்பட்டு, இதுவரை இழப்பீடு வழங்கப்படாத விவசாயிகளுக்கும் புதிய சட்டத்தின்படி கூடுதல் இழப்பீடு வழங்க வேண்டும் என தேசிய நெடுஞ்சாலைப் போக்குவரத்து ஆணையரகம், தேசிய நெடுஞ்சாலை மற்றும் உள்கட்டமைப்பு மேம்பாட்டுக் கழகம் ஆகிய அமைப்புகளுக்கு மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது.

இந்தப் புதிய உத்தரவு காரணமாக, இதுவரை இழப்பீடு தொடர்பாக தீர்வு காணப்படாமல் இருக்கும் 2,000 பிரச்னைகளுக்குத் தீர்வு காண முடியும் என்பதுடன், நெடுஞ்சாலைத் திட்டங்களை விரைவுபடுத்தவும் முடியும்.

அதேவேளையில், புதிய சட்ட விதிகளின்படி விவசாயிகளுக்கு கூடுதல் இழப்பீடு வழங்குவது என்ற முடிவை செயல்படுத்துவதில் சிறிய குழப்பம் நிலவுகிறது.

எனவே, இது தொடர்பான ஆலோசனைகளைத் தெரிவிக்குமாறு மத்திய அரசின் கூடுதல் வழக்குரைஞர் பிங்கி ஆனந்திடம் கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது என்றார் அந்த அதிகாரி.

**கோழித் தீவனத்தில் குளிர்காலத்துக்கான ஊட்டச்சத்துக்களை அளிக்க அறிவுறுத்தல்**

கோழிகளுக்கான தீவனத்தில் தொடர்ந்து குளிர்காலத்துக்கான ஊட்டச்சத்துக்களையே அளித்து வர வேண்டும் வேண்டும் என பண்ணையாளர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதுகுறித்து நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் வெளியிட்ட செய்தி: அடுத்த நான்கு நாள்களுக்கு வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். மழைக்கான வாய்ப்பு குறைவு. இரவு வெப்ப அளவுகள் குளிர்காலத்தில் இயல்பாக நிலவும் குறைந்த அளவுகளிலிருந்து உயர்ந்து காணப்படும். இதனால், இக்குளிர்காலம்

சற்றே வெதுவெதுப்பாக மாறியுள்ளது. இதனால், கோழிகளில் தீவன எடுப்பு ஒரு நாளைக்கு 110 கிராம் என்ற இயல்பான அளவில் இருக்கும்.

பகல் வெப்பம் இப்போதைக்கு உயர வாய்ப்பில்லை. இதனால், மேலும் ஒருவாரத்துக்கு இந்நிலையே நீடிக்கும். எனவே, கோழிகளுக்கான தீவனத்தில் தொடர்ந்து குளிர்காலத்துக்கான ஊட்டச்சத்துக்களையே அளித்து வர வேண்டும்.

கோழியின நோய் கண்காணிப்பு மற்றும் கட்டுப்பாட்டு ஆய்வகத்தில் கடந்த வாரம் பரிசோதனை செய்யப்பட்ட இறந்த கோழிகளில் பெரும்பாலும் இறக்கை அழுகல் மற்றும் ஈகோலை கிருமியின் தாக்கத்தால் பாதிக்கப்பட்டு இறப்பு ஏற்பட்டுள்ளது தெரிய வந்துள்ளது,

எனவே, பண்ணையாளர்கள் கோழிகளுக்கு அளிக்கப்படும் தீவனம் மற்றும் தண்ணீரில் இந்தக் கிருமிகளின் தாக்கம் உள்ளதா என இந்த ஆய்வகத்தில் பரிசோதனை செய்து. அதற்கேற்றார்போல் தீவன மேலாண்மை முறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும்.

## சாத்தான்குளம் பகுதி குளங்களுக்கு வெளிநாட்டுப் பறவைகள் வருகை

சாத்தான்குளம் பகுதியில் உள்ள குளங்களில் நீர் நிலைகள் உயர்ந்துள்ளதையொட்டி இப்பகுதியில் வெளிநாட்டு அரியவகை பறவைகள் வரத் தொடங்கியுள்ளன.

சாத்தான்குளம் பகுதியில் பெய்த வடகிழக்குப் பருவமழையின் காரணமாக இப்பகுதியில் உள்ள கோமானேரி, நெடுங்குளம், அமுதுண்ணாக்குடிகுளம், அமராவதிகுளம், கரையடிகுளம் உள்ளிட்ட அனைத்து குளங்களும் நிறைந்துள்ளன.

நெடுங்குளம், அமுதுண்ணாக்குடிகுளம், கரையடிகுளம் உள்ளிட்ட பல்வேறு குளங்களுக்கு கடந்த இரண்டு மாதங்களாக வெளிநாட்டுப் பறவைகளான பிளமிங்கோ உள்ளிட்ட அரியவகை நாரைகள் வந்து முகாமிட்டுள்ளன.

அவை குளங்கள் அருகே உள்ள மரங்களில் கூட்டமாக அமர்ந்து நீரில் உள்ள மீன் உள்ளிட்டவைகளை பிடித்து உண்டு வருகின்றன. இப்பறவைகள் குளங்களில் முகாமிட்டிருப்பதை பார்த்து கிராம மக்கள் மற்றும் சிறுவர்கள் மிகுந்த மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

இதுகுறித்து விவசாயி ஒருவர் கூறுகையில், இப்பகுதி குளங்களுக்கு அரிய வகை பறவைகள் வந்து செல்வது மிகுந்த மகிழ்ச்சி அளிக்கிறது. நிகழாண்டு பறவைகள் கணக்கெடுப்பின்போது கூடுதலாக அரியவகை பறவைகள் வந்திருப்பது தெரியவரும் என்றார்.

## வேளாண் குடிகளின் மீது வணிகக் கொடிகள்

அமெரிக்கர்கள் நிலவில் காலடிகளைப் பதித்தவுடன் முதல் வேலையாக தங்களது நாட்டின் கொடியொன்றை அங்கே நட்டு வேற்றுக் கிரகமான நிலவில் தாங்கள் பெற்ற வெற்றியினைக் கொண்டாடி மகிழ்ந்தார்கள். இந்தியா விடுதலை பெற்றுவிட்டது என்பதற்கான சான்றாக இந்திய தேசியக் கொடியொன்று தில்லி செங்கோட்டையில் ஏற்றப்பட்டது. ஒன்று வென்றுவிட்டதன் அடையாளமாகவும், இன்னொன்று வீழ்த்தப்பட்டு விட்டதன் அடையாளமாகவும், கொடிகள் பறக்கவிடப்படுகின்றன.

அண்மைக் காலமாக நமது தமிழ் நாட்டின் வயல் வெளிகளில் புதுவகையான கொடி கலாசாரம் ஒன்று தோற்றுவிக்கப்பட்டு, அந்தக் கலாசாரத்தில் சின்னங்கள் ஏதுமற்ற வண்ணக் கொடிகளுக்கு மட்டுமே வாய்ப்பு கொடுக்கப்பட்டிக்கிறது. எத்தனை நிறங்கள் உண்டோ அத்தனை நிறங்களிலும் பள பளப்பான துணிகளில் பறந்து கொண்டிருக்கும் அந்தக் கொடிகளை, வீட்டு மனைகளாக வளைத்துப் போடப்பட்டுவிட்ட விளைநிலங்களில் மட்டுமே காணமுடியும். அத்தகைய கொடிகளால் கைப்பற்றப் பட்டுவிட்ட நிலப்பரப்புகளில் இனி எந்தக் காலத்தில் செடி கொடிகள் பயிராகும் என்பதைச் சிந்தித்துப் பார்க்கவே அச்சமாக இருக்கிறது.

குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என தமிழரின் ஐந்துவகையான நிலங்களிலும் அந்தக் கொடிகள் ஆயிரக்கணக்கில் ஆங்காங்கே பறந்து கொண்டிருக்கின்றன. வேளாண்மையின் பொருட்டு நமது முன்னோர்களால் சமப்படுத்தப்பட்டு வடிவமைக்கப்பட்ட நிலப்பரப்புகள்தான் இன்றைய வீட்டுமனை வணிகத்திற்கு வசதியான விற்பனைக் களங்களாக மாறியிருக்கின்றன. மற்ற நிலப்பரப்புகளைக் காட்டிலும் கைப்பற்றிக் கொடிகளை நடுவதற்கு ஏதுவானவைகளாக இருப்பவை மருத நிலப் பரப்புகள்தான். ஏனெனில், மருத நிலத்திற்கு உரியவர்கள், எத்தகையச் சுய வலிமையையும் பெற்றிருக்காத, அப்பாவித்தனம் நிறைந்த, கடுமையான உழைப்பைத் தவிர வேறு எதையும் அறியாத வேளாண்குடி மக்களாவர். சில லட்சங்களை கையோடு எடுத்துச் சென்றால் பரப்பளவிற்கு ஏற்ப, அவர்களது நிலங்களில் யார் வேண்டுமானாலும் கொடி நடலாம். வேளாண் குடிகளுக்கு எதிரான வேறு கொடிகளை அண்டை மாநிலங்களின் அரசுகள் அனுமதிப்பதில்லை என்பதால் தமிழ் நாட்டின் மருத நிலம் இப்போது வேக வேகமாக மனைகளின் நிலமாக மாறிக்கொண்டிருக்கிறது. ஒரு விவசாயியின் விற்பனை செய்யப்பட்ட நிலத்தில், வேளாண்மைத் தொழில் மட்டுமே நடைபெற வேண்டும் என்கிற கர்நாடக அரசின் சமூக நோக்கிலான உறுதியான சட்டம் போன்று தமிழ்நாட்டில் எத்தகையச் சட்டமும் இல்லை. இந்தியா முழுவதும் விவசாயத்திற்கும், விவசாயத் தொழிலாளர்களுக்கும் ஆதரவான குரல்கள் இப்போது பெருகி வருகின்றன. இன்னும் ஒரு படி மேலே சென்று இயற்கை வேளாண்மையின் பக்கமும், இயற்கையான மரபுவழி உணவுத் தானியங்களின் பக்கமும் இன்றைய மக்களின் கவனம் திரும்பியிருக்கிறது. தமிழ்நாட்டிலும் இத்தகைய விழிப்புணர்வு தலைதூக்கியிருக்கிறது என்றாலும் கூட, விவசாய நிலப்பரப்புகள் வேறு நோக்கங்களுக்காக வேக வேகமாகப் பெருமளவில் கைமாறிக் கொண்டிருப்பதை எவ்வகையிலும், எவராலும் கட்டுப்படுத்த முடியவில்லை. "நாடு முழுதும் இயற்கை விவசாயம்

நடைபெறவேண்டும்; வேளாண் தொழிலை கால்நடைப் பராமரிப்புடன் சேர்த்து மேம்படுத்த வேண்டும், அனைத்துக் குளிர்பானங்களிலும் பழச்சாறுகளைச் சேர்க்கும் உத்தியைக் கடைப்பிடிக்க வேண்டும், கால்நடைகள் வளர்ப்பு, பயிர் வளர்ப்பு, வருமானத்திற்கு உகந்த மரங்கள் வளர்ப்பு எனும் மூன்று பிரிவுகளாக விவசாயத் தொழில் மேற்கொள்ளப்பட வேண்டும்' என்றெல்லாம் விவசாயம் குறித்த தனது லட்சியக் கருத்துகளை சிக்கிம் மாநிலத்தில் அண்மையில் நடந்த விவசாயக் கருத்தரங்கு ஒன்றில் முன்வைத்திருக்கும் பிரதமர் மோடி, இத்தகையக் கருத்துகளை நடைமுறைப்படுத்தவும் குளிர்பானத் தயாரிப்பு நிறுவனங்களின் நிர்வாகிகள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினருடன் கலந்துரையாடியும் வருகிறார். மத்திய, மாநில அரசுகளின் வேளாண்மைத் தொழிற்திட்டங்கள் ஒரு பக்கம் விரிவடைந்து கொண்டேயிருக்கின்றன. புதுக்கோட்டை, தஞ்சாவூர், திருவண்ணாமலை ஆகிய மாவட்டங்களில் ரூ. 150 கோடியில் வேளாண் கல்லூரிகளை அமைக்க இருப்பதாகவும் வேளாண் இயந்திரங்கள், விதைகள் விநியோகத்தில் புதுப்புதுத் திட்டங்களை நடைமுறைப்படுத்தப் போவதாகவும் தமிழக அரசு அறிவித்திருக்கிறது.

இன்னொரு பக்கம் விவசாயத் தொழிலை எல்லோர்க்கும் பயிற்றுவித்து அனைவரையும் அதில் ஈடுபடுத்தும் வகையில் தகவல் தொழில் நுட்பத்துறையில் பணியாற்றிக்கொண்டிருக்கும் இளைஞர்களுக்கெல்லாம் விவசாய ஆராய்ச்சி அமைப்புகள் பயிற்சிகளை வழங்கிக்கொண்டிருக்கின்றன.

அந்த வகையில், நூற்றுக்கணக்கான தகவல் தொழில் நுட்பத்துறை இளைஞர்கள் கிராமப் புறங்களின் வேளாண் களங்களில் தற்போது பயிற்சிகளில் ஈடுபட்டு வருகின்றனர். இவற்றுக்கெல்லாம் மேலாக, நெல்பயிரிடும் நாடுகளின் கைகளில் தான் உலகின் எதிர்காலம் இருக்கிறது. எதிர்காலத்தில் வளமான நாடு எது என்றால் அது அதிக அளவில் நெல்பயிரிடும் நாடுதான் என்று தெரிவித்திருக்கிறார் பிரபல வேளாண் விஞ்ஞானி எம்.எஸ்.சுவாமி நாதன்.

நெல் சாகுபடி செய்ய முற்றிலும் உகந்த நிலம் மருத நிலமேயாகும். தமிழ்நாட்டில் குறிஞ்சி நிலத்தில் (மலைப்பகுதிகளில்) உற்பத்தியாகின்ற ஆறுகள் அனைத்தும் மருத நிலப்பரப்புகளின் நெல் சாகுபடிக்குத்தான் பெருமளவில் பயன்படுத்தப்படுகின்றன. ஆறுகளும், அணைகளும், ஏரிகளும், கண்மாய்களும், குட்டைகளும், பல்வேறு வகையான வாய்க்கால்களும் மருத நிலப்பரப்புகளின் நெல் சாகுபடியை மனதிற்கொண்டே வடிவமைக்கப்பட்டு இன்றளவும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. மருத நிலம் எனும் சமப்படுத்தப்பட்ட நிலப்பகுதிகள் வேளாண்மைத் தவிர்த்த வேறு வேறு தேவைகளுக்காக எத்தகையக் கட்டுப்பாடுகளும் இன்றி கைமாறிக்கொண்டேயிருக்கும் எனில், மேற்குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து வகை நீராதார நிலைகளும் நிர்மூலமாகிப் போய், காலப்போக்கில் அனைவராலும் கைவிடப்பட்டு, அத்தகைய இடங்களிலும் மனை வணிகக் கொடிகள் பறக்கத் தொடங்கிவிடும். இந்த ஆபத்தை உணர்ந்து நமது மருத நிலப்பரப்புகளை பாதுகாக்கவேண்டிய கடமையை அரசுகள் மட்டுமல்ல, நமது மக்களும் உணர்ந்து செயல்பட்டாக வேண்டிய நேரம் வந்துவிட்டது.

அண்மையில் ஒரு நாள், பச்சைப் பசேலென்றிருந்த வயல்வெளிகளைப் பார்த்தபடி, ஒரு பேருந்துப் பயணச் சுகத்தில் நாம் திளைத்திருந்தபோது அவ்வயல்களுக்கு நடுவே ஒரு பெரிய வெற்றிடத்தைப் பார்க்க நேர்ந்து. அந்த இடம் வெண்ணிற கற்களால் பங்கு பிரிக்கப்பட்டு காட்சியளித்தது. வரிசை வரிசையாக நடப்பட்ட வண்ண வண்ணக் கொடிகளும் அங்கே பறந்து கொண்டிருந்தன. நாம் பயணித்த பேருந்து ஒரு சில வினாடிகளில் அவ்விடத்தைக் கடந்து விட்டது. ஆனால், அந்தக் காட்சியைக் கடந்து வர நம்மால் முடியவில்லை. விளை நிலம் ஒன்று வேக வேகமாக வீட்டுமனை நிலமாக மாற்றப்பட்டிருக்கிறது. ஒரு விவசாயிடமிருந்து கைமாறிய அந்த நிலத்தில் மனை வணிகரின் கொடிகள் நூற்றுக்கணக்கில் பறந்து கொண்டிருக்கின்றன. அவ்வளவு சிறிய நிலப்பரப்பில் அத்தனைக் கொடிகளை ஏன் பறக்கவிட்டிருக்கிறார்கள்?

அந்நிலத்தில் இனிமேல் பசுமை நிற நெல்வயல்களுக்கு இடமில்லை என்பதை அறிவிக்கும் விதமாக பல்வேறு வண்ணங்களால் ஆன கொடிகளை நட்டு வைக்கிறார்களா? ஒரு விவசாயியின் வீழ்ச்சியை அவனது நிலத்திலேயே கொடிகளை நட்டுக் கொண்டாடுகிறார்களா? வேளாண் குடிகளின் மீது வெற்றிக் கொடிகளைப் பறக்கவிடுவதுதான் நமது நாட்டின் வளர்ச்சியா? காரணம் இல்லாமலா அத்தனைக் கொடிகளை அந்நிலத்தில் நட்டிருப்பார்கள்? நாம் இப்படி யோசித்துப் பார்த்தோம். அந்த நிலத்தில் பறக்கவிடப்பட்டிருக்கும் ஒவ்வொரு கொடிக்கும் ஒரு காரணம் இருக்கிறது. அந்த நிலத்தை முன் வைத்து ஒரு விவசாயி தோற்கடிக்கப்பட்டிருக்கிறான். அந்நிலத்தில் அவனது விவசாயத் தொழில் தோற்கடிக்கப்பட்டிருக்கிறது. அந்நிலத்தை நம்பி வாழ்ந்த ஒரு குடும்பமும் அதன் கெப்ரவமும் தோற்கடிக்கப்பட்டிருக்கின்றன.

அந்நிலத்தை உழுத மாடுகள், அதில் நடந்து இரை தேடிய கொக்குகள், தத்தித் தாவிய தவளைகள், ஊர்ந்து நீந்திய பாம்புகள், வரப்புவளைகளில் வாழ்ந்த எலிகள், நெல்மணிகளைத் தின்று பறந்த பறவைகள் என்று அந்த நிலம் சார்ந்து வாழ்ந்து கொண்டிருந்த அனைத்து உயிர்களும் தோற்கடிக்கப்பட்டுள்ளன. பெருக்கெடுத்துச் சென்று அந்நிலத்தில் பல காலம் பாய்ந்து கொண்டிருந்த நீருக்கும் அந்த நிலத்துக்குமான உன்னதமானதொரு இயற்கையுறவு தோற்கடிக்கப்பட்டிருக்கிறது. ஓர் இனிய சூழல் நலம் தோற்கடிக்கப்பட்டிருக்கிறது.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக, கணக்கிட்டுச் சொல்ல முடியாதபடிக்கு ஆயிரமாயிரம் தலைமுறைகளுக்கு விளைந்து கொடுக்கத் தயாராக இருந்த, முந்தைய ஆயிரமாயிரம் தலைமுறைகளுக்கு எதை எதையோ விளைவித்துக் கொடுத்துக் கொண்டும் இருந்த ஒரு நிலத்தின் இயற்கையான கொடை இயல்பு, கொடூரமான முறையில் தோற்கடிக்கப்பட்டிருக்கிறது.

அந்த நிலப்பரப்பு அடைந்த தோல்விகள் ஒவ்வொன்றின் மீதும் வெற்றிக்

கொடிகளாக பல்வேறு வண்ணக் கொடிகள் பறக்கவிடப்பட்டுள்ளன. ஓர் ஏக்கர் நிலத்தில் வேறு வேறு வண்ணங்களில் நூறு கொடிகள் பறந்து கொண்டிருப்பதற்கான காரணத்தை நாம் இப்படித்தான் புரிந்து கொள்கிறோம். நம்முடைய அத்தகையப் புரிதல் கற்பனை அல்ல உண்மை,பேருண்மை.

நீரின்றி மட்டுமல்ல, நீர்பாய்ந்து விளைகின்ற நிலமின்றியும் அமையாது உலகு. ஒரு விவசாயியின் விற்பனை செய்யப்பட்ட நிலத்தில், வேளாண்மைத் தொழில் மட்டுமே நடைபெற வேண்டும் என்கிற கர்நாடக அரசின் சமூக நோக்கிலான உறுதியான சட்டம் போன்று தமிழ்நாட்டில் எத்தகையச் சட்டமும் இல்லை.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## சரியும் முட்டை விற்பனை

கார்த்திகை, மார்கழியில் முட்டை விற்பனை சரிகிறது.விரதகாலங்கள் மட்டுமின்றி பொதுவாகவே அன்றாட உணவில் முட்டையைப் பயன்படுத்துவதில் தமிழர்கள் மட்டுமின்றி இந்தியர்களே மிகவும் பின்தங்கி தான் உள்ளனர். நேஷனல் இன்ஸ்டிடியூட் ஆப் நியூட்ரிஷன் பரிந்துரைபடி ஒரு தனிநபர் இருநாட்களுக்கு ஒரு முறையாவது முட்டை சாப்பிட வேண்டும். ஓர் ஆண்டுக்கு கஅ0 முட்டைகளாவது சாப்பிட வேண்டும். ஆனால் இந்தியாவில் ஓர் ஆண்டுக்கு தனிநபர் சராசரியாக சந முட்டைகள் மட்டுமே சாப்பிடுகிறார். உலக அளவில் முட்டை உற்பத்தியில் இந்தியா ருவது இடத்தில் உள்ளது. ஆனால் தனிநபர் பயன்பாட்டில் தான் பின்தங்கி உள்ளது.

## 'காளான்' உற்பத்தியாளர் வரவால் வைக்கோல் விற்பனை 'விறுவிறு'

சத்தியமங்கலம்: பவானிசாகர் அணையில் இருந்து கீழ்பவானி வாய்க்காலில் தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. இதன் மூலம், சத்தி பகுதியில், 10 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் விவசாயிகள் நெல் பயிரிட்டுள்ளனர். தற்போது நெல் அறுவடை நடக்கிறது. காளானை உலர வைப்பதில் வைக்கோல் முக்கிய பங்கு வகிக்கிறது. இதனால் காளான் உற்பத்தியாளர்கள், வைக்கோலை வாங்கிச் செல்ல அதிகம் வருகின்றனர். ஒரு ஏக்கருக்கு, 1,000 ரூபாய் முதல், 1,500 ரூபாய் வரை கொடுத்து வாங்கிச் செல்கின்றனர். அதே சமயம் கால்நடைக்கு வைக்கோல் வாங்குவது குறைந்துள்ளது.

## விவசாயத்தில் மின்சிக்கனத்தை வலியுறுத்தும் "கிசான் மேளா'

காந்திகிராமம் : விவசாயத்தில் மின்சிக்கனத்தை வலியுறுத்தும் முறைகள் குறித்த சிறப்பு முகாம்களை கிராமங்கள் தோறும் காந்தி கிராம பல்கலையின் கிராம எரிசக்தி மையம் நடத்தி வருகிறது.

இந்தியாவில் தொழில்துறைக்கு பின் விவசாய துறையில் தான் அதிகளவில் எரிசக்தி பயன்படுகிறது. மின்சாரம் மற்றும் திரவ எரிபொருள்களை பயன்படுத்தி நடவுசெய்தல், களை எடுத்தல், நீர்ப்பாய்ச்சுதல், அறுவடை பணிகள் நடக்கின்றன.

சிறப்பு முகாம்கள்: சென்னையில் உள்ள பெட்ரோலியம் பாதுகாப்பு ஆராய்ச்சிக் கழகம், காந்தி கிராம பல்கலை கிராமிய எரிசக்தி மையம் இணைந்து "கிசான் மேளா' திட்டத்தில் சிறப்பு மின்சார சிக்கன முகாம்களை நடத்தி வருகிறது. இம் முகாம்கள் மூலம் 25 சதவீத எரிபொருட்களை சேமிக்கலாம், சுற்றுச்சூழல் மாசுபடுவதையும்

குறைக்கலாம் என வலியுறுத்தி வருகின்றனர். மேலும், விவசாய பம்பு மற்றும் டிராக்டர் பயன்பாட்டில் எரிபொருளை எவ்வாறு சேமிப்பது என துண்டு பிரசுரங்களை வினியோகிக்கின்றனர். இதற்கான சிறப்பு கண்காட்சிகளுடன், குறும்படமும் திரையிடப்படுகிறது.

கிராமிய எரிசக்தி மைய பேராசிரியர் கிருபாகரன், தொழில்நுட்ப உதவியாளர் கோவிந்தராஜ் கூறியதாவது: விவசாயிகள் மிக எளிதான நடவடிக்கைகள் மூலம் மின்சாரத்தை சேமிக்கலாம். தகுதியான மின் மோட்டார் தேர்வு செய்தல், அடிக்கடி பெல்ட் இழுவை திறனை சோதித்தல், தண்ணீர் குழாய்களில் தேவையில்லாத வளைவுகளை தவிர்த்தல், உராய்வை குறைக்கும் எண்ணெய் பயன்படுத்துவது, சொட்டு நீர்ப்பாசன முறை போன்றவற்றை பொதுமக்களிடம் வலியுறுத்தி வருகிறோம், என்றனர்.

## அழகாபுரி அணை தண்ணீர் விவசாயத்திற்காக திறப்பு

வேடசந்தூர் : அழகாபுரி அணையில் இருந்து, விவசாயத்திற்காக நாற்பத்து ஐந்து நாட்களுக்கு தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது.

அழகாபுரியில் உள்ள குடகனாற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள குடகனாறு அணையில் இருந்து இரண்டு கிளை வாய்க்கால்கள் அமைக்கப்பட்டுள்ளது. இதில் இருந்து திறக்கப்படும் தண்ணீர் மூலம், திண்டுக்கல் மாவட்டத்தில் 3 ஆயிரத்து 663 ஏக்கர் நிலமும், கரூர் மாவட்டத்தில் 5 ஆயிரத்து 337 ஏக்கர் நிலமும் நீர் பாசனம் பெறும். இந்த குடகனாறு அணையில் தற்போது 25 தண்ணீர் தேங்கியுள்ளதால், நேற்று முன்தினம் பாசனத்திற்காக தண்ணீர் முறையாக திறக்கப்பட்டது. திண்டுக்கல் எம்.பி., உதயக்குமார், பாசனத்திற்காக தண்ணீரை திறந்தார். கடந்த 20.1.16 முதல் தண்ணீர் திறக்கப்பட்டதால், ஒரு வாரத்திற்கு தண்ணீர் செல்லும். மீண்டும் ஒரு வாரம் நிறுத்தப்படும். மீண்டும் திறக்கப்படும். இதே போல் 45 நாட்களுக்கு தண்ணீர் திறப்பதால்,

விவசாயிகள் கடலை, கம்பு, சோளம் உள்ளிட்ட விவசாய பயிர்களை பயிர் செய்து, மகசூல் எடுக்க வாய்ப்புள்ளது. செயற் பொறியாளர் ஜெயராம், உதவி செயற்பொறியாளர் தமிழ்செல்வன், இளநிலை உதவியாளர் சரவணக்குமார் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## மேய்ச்சல் நிலங்களை தேடி கால்நடைகள் வருவது அதிகரிப்பு! இயற்கை உரம் சேகரிப்பில் விவசாயிகள் ஆர்வம்.

தியாகதுருகம்: கள்ளக்குறிச்சி பகுதியில் உள்ள தரிசு நிலங்களில் புற்கள் செழித்து வளர்ந்துள்ளதால் வெளி மாவட்டங்களில் இருந்து மேய்சலுக்காக கால்நடைகள் வருவது அதிகரித்துள்ளது. இவற்றைப் பயன்படுத்தி விவசாய நிலங்களில் கிடை கட்டுவதன் மூலம் இயற்கை உரம் சேகரிப்பில் விவசாயிகள் ஆர்வம் செலுத்தியுள்ளனர்.

விழுப்புரம் மாவட்டத்தில் கடந்த 4 ஆண்டுகளாக, பருவமழை அளவு குறைந்து கடும் வறட்சி ஏற்பட்டது. அணை, ஏரி, குளங்கள் நிரம்பாததால் நீர்வளம் குறைந்து விவசாயம் பாதிக்கப்பட்டது. மழை காலத்தில் கூட ஏரி, குளங்கள் கோடையை போல் வறண்டு பரிதாபமாக காட்சியளித்தது.

இதனால் கால்நடை வைத்திருப்பவர்கள், அவற்றை பராமரிக்க முடியாமல் தவித்தனர். நெல் சாகுபடி பரப்பு குறைந்ததால், மாடுகளின் முக்கிய தீவனமாகன வைக்கோல் தட்டுபாடு காரணமாக, அதிக விலைக்கு வாங்க வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டது. அதேபோல் மேச்சல் நிலங்கள் அனைத்தும் மழையின்றி கருகி, கட்டாந்தரைபோல் மாறியதால் கால்நடைகள் உணவு கிடைக்காமல் திண்டாடின. மிகக் குறைந்த விலைக்கு கால்நடைகளை விற்க வேண்டிய பரிதாப நிலைக்கு, விவசாயிகள் தள்ளப்பட்டனர்.

வெளி மாவட்டங்களில் இருந்து மேய்ச்சலுக்கு ஆடு, மாடுகளை ஓட்டி வருவது குறைந்தது. வறட்சியால் கால்நடை வளர்ப்பு கடும் சவாலாக

மாறியது. பால் உற்பத்தி செய்யும் நோக்கில் உள்ளவர்கள் மட்டும் கடும் சிரமங்களுக்கிடையே பசுக்களை பராமரித்தனர்.

இந்நிலையில் இந்தாண்டு வட கிழக்கு பருவமழை தீவிரமடைந்து கனமழை பெய்து நீர்நிலைகள் அனைத்தும் முழுவதும் நிரம்பியது. கரம்பாக கிடந்த வயல்களில் நெல் நடவுப் பணிகள் துவங்கியதால் விவசாயம் மீண்டும் புத்துயிர் பெற்றுள்ளது. தரிசு நிலங்களில் புற்கள் செழித்து வளர்ந்துள்ளதால் கால்நடைகளுக்கு போதிய மேய்ச்சல் பகுதி கிடைத்துள்ளது.

இதையடுத்து வெளி மாவட்டங்களில் இருந்து மந்தை மந்தையாக ஆடு, மாடுகள் மேய்ச்சலுக்காக ஓட்டி வருவது அதிகரித்துள்ளது. கிணறுகளில் நீர்மட்டம் உயர்ந்துள்ளதால் சாகுபடி செய்வதற்கு ஏற்ற சூழல் திரும்பியுள்ளது. வயல்களில் இயற்கை உரம் இடும் நோக்கில் "கிடை' கட்டுவதில் விவசாயிள் பலர் ஆர்வம் காட்டி வருகின்றனர். மேய்ச்சல் முடிந்து மாலை நேரத்தில் நடவு செய்யாத நிலங்களில் ஆடுகளை கும்பலாக ஓய்வெடுக்க வைப்பதை "கிடை' கட்டுதல் என்று அழைக்கப்படுகிறது.

இவ்வாறு கிடை கட்டவதால், ஆடுகள் போடும் சாணம், சிறுநீர் ஆகியவை பயிர்களுக்கு நல்ல இயற்கை உரம் என்பதால் விவசாயிகள் பலரும் தங்கள் நிலங்களில் கிடை கட்ட ஆர்வம்காட்டி வருகின்றனர்.

இதற்கு குறிப்பிட்ட தொகையை மந்தை வைத்திருப்பவர்கள், நிலத்தின் உரிமையாளரிடம் பெற்றுக்கொள்கின்றனர். ஒரு ஏக்கரில் 2,500 ஆடுகள் வரை "கிடை' கட்டுகின்றனர். இதற்காக ஒரு இரவுக்கு 1,000 ரூபாய் வரை வசூலிக்கின்றனர். இதன் மூலம் ஆட்டு மந்தை வைத்திருப்பவர்களுக்கு கூடுதல் வருமானம் கிடைக்கிறது.

தற்போது பல ஆயிரக்கணக்கில் ஆடு, மாடுகள் மேயச்சலுக்காக கள்ளக்குறிச்சி சுற்றியுள்ள சங்கராபுரம், ரிஷிவந்தியம், தியாகதுருகம்,

சின்னசேலம், கச்சிராயபாளையம் ஆகிய பகுதிக்கு வருவது அதிகரித்துள்ளது. மொத்தத்தில் இந்தாண்டு பெய்துள்ள மழையால் கால்நாடை வளர்ப்போரும், பயிர் சாகுபடி செய்யும் விவசாயிகளும் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

## வீடுகளில் தோட்டம் அமைப்போம்... மன மகிழ்ச்சி பெறுவோம்

காடு, மரங்களை அழித்தால் நாடு அழியும் என்பது பழமொழி. கால நிலையை சீராக வைப்பதற்கும், மழை பொழியவும், வெப்பத்தை குறைக்கவும் மரங்கள் பயன்படுகின்றன. இதை உணராமல் மனிதர்கள் மரங்களை அழித்து வருகின்றனர். மரங்கள் அழிவதில் இருந்து தவிர்க்க வீட்டிற்கு ஒரு மரம் வளர்ப்போம் என சிந்தனையாளர்கள் கூறுகின்றனர்.

இதையே தனது கொள்கையாகவே கடைபிடித்து வருகிறார் திருத்தங்கல் கருப்பசாமி. தனது வேலையுடன் இயற்கை வளங்களை காக்கும் வீதம் வீட்டு தோட்டம் அமைத்து வெற்றி கண்டுள்ளார். குடும்பத்தோடு விவசாய பணிகள் செய்வதால் மனதிற்கு மகிழ்ச்சி தருவதாக கூறும் அவர், செழிப்பான பப்பாளி, மாதுளை, தென்னை, வாழை, வெண்டை, தக்காளி, பூசணி உள்ளிட்ட காய்கறி வகைகளை விளைவித்து வருகிறார்.

கருப்பசாமி கூறுகையில், "" "டிவி'யில் இயற்கை வளங்களை தத்ரூபமாக காண்பிக்கும் சேனலை விடாமல் பார்ப்பேன். அதில் ஒன்றாக உள்ள "டிஸ்கவரி' சேனலில் உலகில் அரிய வகை பல மரங்கள் அழிந்து வருவதாக தெரிவித்தனர். நிலைமை இப்படியே சென்றால் வீட்டில் அருகே நிற்கும் மரம் கூட அழிந்து விடும். இதை மாற்றவே வீட்டு தோட்டம் அமைத்தேன். எனது மனைவி உமாமகேஷ்வரி உதவியாக உள்ளார். காலையில் எழுந்ததுடன் தோட்டத்திற்கு தண்ணீர் விடுவது, களைபிடுங்குவது போன்ற வேலைகள் செய்வேன். இதற்காக 2 மணி நேரம் ஒதுக்குவேன். அதன் பின் வேலைக்கு செல்வேன். வீட்டிற்கு

தேவையான காய்கறிகளை தன் தோட்டத்தில் விளைந்து விடுவதால் காய்கறி சந்தைக்கு செல்லவேண்டிய அவசியமில்லாமல் போனது," என்றார்.

## சக்கைப்போடு போடும் சவுக்கு சாகுபடி

குணசேகரன்(திருத்தங்கல்): மரம் வளர்ப்பு என்றால் அதன் பலனை அனுபவிக்க பல ஆண்டுகள் காத்திருக்க வேண்டும் என்ற சிந்தனை பலருக்கு உண்டு. சவுக்கு மரம் 5 ஆண்டில் அறுவடை செய்யலாம். வணிக ரீதியான பயன்பாட்டுக்கு சவுக்கு நல்ல பலன் தரும். கட்டட வேலை, காகித கூழ் தயாரிப்பு இம் மரம் அதிக பயன்படுகிறது. ஏக்கருக்கு 50டன் கிடைக்கும். இதில் 30டன் உருட்டு கட்டையாகவும், 20 டன் விறகாகவும் கிடைக்கும். ஒருடன் உருட்டு கட்டை ரூ.2800. விறகு ஒருடன் ரூ.2200 வரை விலைபோகிறது. இதுபோன்ற பலன்களால் திருத்தங்கல், சிவகாசி பகுதியில் பலரும் சவுக்கு சாகுபடிக்கு மாறி வருகின்றனர். சவுக்கு சாகுபடி சக்கைப்போடு போடும்.

## மூங்கில் வளர்ப்போம் ஆக்சிஜன் பெறுவோம்

மைக்கல்(திருத்தங்கல்): மூங்கில் மரம் ஒருமுறை நட்டால் மூன்று தலைமுறைக்கு வருமானம் தரும் பச்சை தங்கம் என அழைக்கப்படும் மரம். அதிகளவு ஆக்சிஜனை உற்பத்தி செய்து சுத்தமான காற்றை சுவாசிக்க தருகிறது. ஒரு மனிதனுக்கு ஒரு நாளைக்கு 800 கிராம் ஆக்சிஜன் தேவைப்படுகிறது. மூங்கில் மரம் நாள் ஒன்றுக்கு 850 கிராம் ஆக்சிஜனை உற்பத்தி செய்கிறது. அதனால் கார்பன் வணிகத்தில் மூங்கில் முக்கிய இடம் பிடிக்கிறது. எனவே சுத்தமான ஆக்சிஜன் வேண்டுவோர் வீட்டுக்கு ஒரு மூங்கில் மரம் வளர்த்து பயனை அனுபவியுங்கள்.

## இன்றைய வேளாண் செய்திகள்

### காபி உற்பத்தி 3.8 லட்சம் டன்னாக உயர வாய்ப்பு




மும்பை: இந்திய சர்வதேச காபி திருவிழா 5 நாட்களுக்கு நடக்கிறது. இதில் பங்கேற்ற இந்திய காபி வாரியத்தின் தலைவர் லீனா நாயர் கூறியதாவது: காபி உற்பத்தி இந்த ஆண்டு சிறப்பாக இருக்கும். நடப்பு ஆண்டில் ெமாத்தம் 3,80,600 டன் காபி உற்பத்தி செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதில் ரோபஸ்டா உற்பத்தி ஒரு லட்சம் டன்னாக இருக்கும். ஐரோப்பிய யூனியன் நாடுகள், அமெரிக்கா, கனடா, ஜப்பான், ஆஸ்திரேலியா, நியூசிலாந்து, தென்கொரியாவுக்கு காபி ஏற்றுமதியை அதிகரிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதுபோல் கடந்த 2000வது ஆண்டில் இருந்து உள்நாட்டில் காபி பயன்பாடு ஆண்டுக்கு 5 முதல் 6 சதவீதம் அதிகரித்து வருகிறது என்று தெரிவித்தார்.

### மேகமூட்டத்தால் தேயிலை செடிகளில் கொப்புள நோய்

குன்னூர், : நீலகிரி மாவட்டத்தில் கடந்தாண்டு எதிர்பாராத வகையில் வடகிழக்கு பருவமழை தீவிரமடைந்ததால் மாவட்டம் முழுவதும்

மேகமூட்டத்துடன் கூடிய பரவலான மழை பெய்தது. கனமழை பெய்யாவிட்டாலும் பகல் நேரத்தில் சூரிய வெளிச்சம் குறைவாக இருந்ததால் தேயிலை செடிகளில் கொப்பள நோய் ஏற்பட்டு மகசூல் வெகுவாக குறைந்தது. இதனை தொடர்ந்து கடந்த 1 வாரமாக குன்னூர், கோத்தகிரி, கொலக்கம்பை, அருவங்காடு, சேலாஸ் உள்ளிட்ட பகுதியில் நீர்மற்றும் உறைபனியின் தாக்கம் அதிகரித்தது. இதனால் சுமார் 500 ஏக்கர் பரபரப்பளவிலான தேயிலை செடிகள் கருகியதுடன் மழைத்தோட்ட காய்கறி பயிர்களும் பாதிப்புக்கு உள்ளானது. இதனால் விவசாயிகள் பெரும்பாதிப்படைந்து உள்ளனர். இந்நிலையில் கடந்த 2 நாட்களாக மேகமூட்டத்துடன் கூடிய சாரல் மழை நீடித்து வருவதால் உள்ளூர்வாசிகளின் இயல்பு வாழ்க்கை வெகுவாக பாதித்துள்ளது. பனிக்காலத்தில் மழைச்சாரல் நீடிப்பதால் கடும் குளிரும் நிலவி வருகிறது.

## கரூர் மாவட்டத்தில் மரவள்ளி கிழங்கு கொள்முதல் விலை கடும் உயர்வு

கரூர், : மரவள்ளிக்கிழங்கு கொள்முதல் விலை உயர்ந்துள்ளது. கரூர் மாவட்டம் நொய்யல், வேட்டமங்கலம், ஒரம்பு பாளையம், ஓலப்பாளையம், நல்லிகோயில், கவுண்டம்புதூர், குளத்துப்பாளையம், புன்னம் உள்ளிட்ட பகுதிகளில் ஆயிரக்கணக்கான ஏக்கரில் விவசாயிகள் மரவள்ளிக்கிழங்கு பயிரிட்டுள்ளனர். விளைந்த மரவள்ளிக் கிழங்குகளை புதுச்சத்திரம், செல்லம்பட்டி, புதன்சந்தை, நாமகிரிபேட்டை, ஜேடர்பாளையம், ஆத்தூர் போன்ற பகுதிகளில் செயல்படும் சவ்வரிசி தயாரிக்கும் கிழங்குமாவு மில்களுக்கு அனுப்பி வைக்கின்றனர். மரவள்ளிக் கிழங்குகளை டார்ச் பாய்ன்ட் அடிப்படையில் கொள்முதல் செய்யப்படுகிறது. சவ்வரிசி விலை உயரும்போது மரவள்ளிக் கிழங்கின் விலையும் உயரும். சவ்வரிசி விலை சேகோசர்வ் மூலம் நிர்ணயம் செய்யப்படுகிறது. கடந்த வாரம் மரவள்ளி கிழங்கு டன்னுக்கு ரூ.5ஆயிரத்துக்கு விலைபோனது. இந்த வாரம் ரூ.6 ஆயிரத்திற்கு

விற்பனையானது. மேலும் சிப்ஸ் தயாரிப்பவர்கள் டன்னுக்கு ரூ.6,500 விலை கொடுத்து வாங்கி சென்றனர். விலை உயர்ந்துள்ளதால் மரவள்ளிக்கிழங்கு பயிரிட்ட விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

## 2% டிஏபி கரைசல் தெளிக்க எக்டேருக்கு ரூ.650 மானியம்

பட்டுக்கோட்டை, ; திருவோணம் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் மதியரசன் வெளியிட்டுள்ள அறிக்கை: மனிதனின் ஆரோக்கியத்துக்கு ஏற்ற புரதச்சத்து நிறைந்த உளுந்து பயிரில் அதிக மகசூல் எடுக்க வேண்டுமெனில் பூக்கும் பருவம் மற்றும் காய் பிடிக்கும் பருவத்தில் 2 சத டிஏபி கரைசல் 2 முறை தெளிப்பது அவசியமாகும். மணிச்சத்து கொடுக்கக்கூடிய டிஏபி உரக்கரைசல் தெளிப்பதால் சராசரியாக 25 முதல் 30 சதவீதம் வரை கூடுதல் மகசூல் எடுக்க முடியும். அத்துடன் விதை மணிகள் அனைத்தும் பொக்கு இல்லாத சுருக்கம் இல்லாத கோடையில்லாத மற்றும் நல்ல தரமுடையதாகவும், திரட்சியானதாகவும், எடை நிறைந்தவை யாகவும் இருக்கும். இதனால் உளுந்து பயிரில் டிஏபி கரைசல் தெளிப்பதை ஊக்குவிக்கும் வகையில் 50 சதவீத மானியத்தை மத்திய, மாநில அரசுகள் அறிவித்துள்ளது. அதன்படி தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டத்தின்கீழ் பயறு இயக்கம் என்ற துணை திட்ட தலைப்பின்கீழ் திருவோணம் வட்டாரத்தில் 2 சதவீத டிஏபி கரைசல் தெளிப்பு திட்ட இனம் செயல்படுத்துவதற்கு பொருள் இலக்காக 150 எக்டேரும், நிதி இலக்காக ரூ.97,500ம் ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது. அதன்படி ஒரு எக்டேருக்கு தேவைப்படும் 25 கிலோ டிஏபி உரத்தை பனிரண்டரை கிலோ வீதம் பூக்கும் பருவத்தில் 30-35வது நாள் ஒரு முறையும் மீதி பணிரண்டரை கிலோவை 10 நாள் கழித்து 40-45வது நாள் காய்பிடிக்கும் பருவத்தில் ஒரு முறையும் என 625 லிட்டர் தண்ணீரில் கலந்து ஒரு எக்டேர் பரப்பில் தெளிக்க வேண்டும். டிஏபி உரத்தை உங்கள் பகுதியில் உள்ள தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில் முழு விலையில் பெற்று உரம் வாங்கியதற்கான ரொக்க ரசீது பட்டியலை வேளாண்மை உதவி அலுவலரை சந்தித்து

ஒப்படைப்பதுடன், முறையான மானிய கோரிக்கை விண்ணப்பம் பெற்று அத்துடன் உளுந்து சாகுபடி செய்தற்கான ஆவணங்களை தர வேண்டும். அலுவலக கூர்ந்தாய்வுக்கு பின்னர் டிஏபி உரத்தின் முழு விலையில் 50 சதவீதம் (அல்லது) ஒரு எக்டேருக்கு ரூ.650 இதில் எது குறைவோ அது விவசாயிகளின் வங்கி கணக்கில் பின்னேற்பு மானியமாக வரவு வைக்கப்படும். எனவே மேற்படி திட்டத்தின்கீழ் மானியம் பெற விரும்பும் விவசாயிகள் உங்கள் பகுதி வேளாண்மை உதவி அலுவலர் (அல்லது) திருவோணம் வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகத்தை தொடர்பு கொள்ளலாம்.

## திருச்செந்தூரில் மரக்கன்றுகள் வழங்கும் விழா

திருச்செந்தூர், : திருச்செந்தூரில் மரக்கன்றுகள் வழங்கும் விழா ஆழ்வார்தோப்பு கிராம உதயம் சார்பில் நடந்தது.விழாவிற்கு திருச்செந்தூர் ஆர்டிஓ தியாகராஜன் தலைமை வகித்து பயனாளிகளுக்கு ஆயிரம் மரக்கன்றுகள் வழங்கி னார். ஆசிரியர் பயிற்சி நிறுவன முதல்வர் மரியசெசிலி முன்னிலை வகித்தார். கிராம உதயம் கிளை மேலாளர் வேல்முருகன் வரவேற்றார். விழாவில் கிராம உதயம் நிறுவனர் சுந்தரேசன், ஆலோசனை குழு உறுப்பினர் புகழேந்தி பகத்சிங், தனி அலுவலர் ராமச்சந்திரன், கராத்தே மாஸ்டர் சண்முகசுந்தரம், கிராம உதய பகுதி அதிகாரிகள் பிரேமா, ஆறுமுகவடிவு, மைய தலைவர்கள் ராணி, தேவி, தெய்வானை உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். கிராம உதயம் தன்னார்வ தொணடர் ஜெசிந்தா நன்றி கூறினார்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**பரம்பிக்குளம் அணையின் பராமரிப்பு பணியை தமிழகம் தான் தொடர்ந்து செய்ய வேண்டும் மத்திய அரசுக்கு ஜி.கே.வாசன் வலியுறுத்தல்**

சென்னை,

தமிழ் மாநில காங்கிரஸ் தலைவர் ஜி.கே.வாசன் வெளியிட்டுள்ள அறிக்கையில்கூறியிருப்பதாவது:–

கேரள வனப்பகுதியில் அமைந்துள்ள பரம்பிக்குளம் அணை தமிழகப் பொதுப் பணித்துறை யால் கட்டப் பட்டது. இந்த அணையை தமிழக அரசு தொடர்ந்து பராமரித்து வருகிறது. இந்தநிலையில் கேரள அரசு பரம்பிக்குளம் அணையை பராமரிக்கச் சென்ற தமிழக அரசு அதிகாரிகளை அனுமதிக்க மறுப்பதும், அவர்களை பணியாற்றவிடாமல் தடுப்பதும் நடைபெற்று வருகிறது.

மேலும் தமிழக அரசின் தொடர் பராமரிப்பில் உள்ள பரம்பிக்குளம், துணா கடவு மற்றும் பெருவரிப்பள்ளம் ஆகிய மூன்று அணைகளும் கேரள அரசின் பொறுப்பில் உள்ளதாக மத்திய அரசு அறிவிப்பு வெளியிட்டிருப்பது ஒரு தலைப்பட்சமான முடிவாகும். தமிழகத்தின் பராமரிப்பில் இருக்கும் இந்த அணையின் விவகாரத்தில் மத்திய அரசு தமிழக அரசின் கருத்தை கேட்காமல் தன்னிச்சையாக ஓர் அறிவிப்பை வெளியிட்டிருப்பது இரு மாநிலங்களுக்கும் இடையே சிக்கலுக்கும், சர்ச்சைக்கும் வழி வகுக்கும்.

எனவே இரு மாநிலங்களுக்கிடையே நல்லுறவு தொடர, பரம்பிக்குளம் அணையின் பராமரிப்பு பணியை தமிழகம் தான் தொடர்ந்து செய்ய வேண்டும் என்பதை மத்திய அரசு உறுதி செய்ய வேண்டும். மேலும் தமிழகத்தின் பராமரிப்பில் உள்ள அணைகளை தமிழகமே தொடர்ந்து மேற்கொள்ள தமிழக அரசு உடனடியாக மத்திய அரசை வலியுறுத்த வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## காஞ்சீபுரம் மாவட்டத்தில் ஆறுகளில் தடுப்பணைகள் கட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் விவசாயிகள் குறைதீர் கூட்டத்தில் வலியுறுத்தல்



காஞ்சீபுரம்

காஞ்சீபுரம் மாவட்டத்தில் உள்ள ஆறுகளில் தடுப்பணைகள் கட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று விவசாயிகள் குறைதீர் கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது.

<u>விவசாயிகள் குறைதீர் கூட்டம்</u>

காஞ்சீபுரம் மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில், விவசாயிகள் குறைதீர் கூட்டம் நடந்தது. இந்த கூட்டத்துக்கு கலெக்டர் கஜலட்சுமி தலைமை தாங்கினார். இந்த கூட்டத்தில், பங்கேற்ற விவசாயிகள் மழையால் பாதிக்கப்பட்ட பயிர்களுக்கு நிவாரணம் வழங்க வேண்டும் என்று வலியுறுத்தினர்.

தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் மாவட்ட செயலர் நேரு: வெள்ளத்தில் அடித்து செல்லப்பட்ட கால்நடைகள் குறித்த கணக்கெடுப்பு முறையாக நடைபெறவில்லை, நீர் ஆதாரத்தை பாதுகாக்கும் வகையில் மாவட்டத்தில் உள்ள ஆறுகளில் தடுப்பணைகளை கட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

<u>காட்டுப்பன்றிகளால் சேதம்</u>

விவசாயப் பணிகள் தொடங்கியுள்ளதால் உரம், பூச்சி மருந்துகள் தட்டுப்பாடில்லாமல் கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். விவசாய நிலங்களில் காட்டுப்பன்றிகளால் ஏற்படும் சேதங்களை சமாளிக்க அதிகாரிகள் ஆய்வு செய்ய வேண்டும்.

அப்போது கலெக்டர் கஜலட்சுமி, விவசாயிகள் கோரிக்கைகள் குறித்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று உறுதி அளித்தார்.

## 15 நாட்களில் ஏரி, குளங்களில் உள்ள சீமை கருவேல மரங்களை அகற்றும் பணி தொடங்கப்படும் கலெக்டர் டி.பி.ராஜேஷ் தகவல்



கரூர்

15 நாட்களில் ஏரி, குளங்களில் உள்ள சீமை கருவேல மரங்களை அகற்றும் பணி தொடங்கப்படும் என்று கலெக்டர் டி.பி.ராஜேஷ் கூறினார்.

குறை தீர்க்கும் நாள் கூட்டம்

கரூர் கலெக்டர் அலுவலகத்தில் விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் நேற்று நடந்தது. கூட்டத்திற்கு கலெக்டர் டி.பி.ராஜேஷ் தலைமை தாங்கினார். மாவட்ட வருவாய் அதிகாரி அருணா முன்னிலை வகித்தார்.

கூட்டத்தில் விவசாயி சுப்பிரமணியன் கூறுகையில், விவசாயிகள் மீன் வளர்ப்பதற்கு அனைத்து வகையான மீன் குஞ்சுகளும் கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

அதற்கு கலெக்டர் பதில் அளித்து பேசுகையில், விவசாயிகளுக்கு மீன் குஞ்சுகள் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

விவசாயி முத்துசாமி (கூனம்பட்டி):– நங்காஞ்சியாற்றில் உள்ள சீமை கருவேல மரங்களை அகற்ற வேண்டும் என்று கூறினார்.

கலெக்டர்:– கரூர் மாவட்டத்தில் மொத்தம் எத்தனை ஏரி, குளங்கள் உள்ளது என்று ஆய்வு செய்யப்படும். அதன்படி கிராம ஊராட்சி, பேரூராட்சி, ஒன்றியம் வாரியாக ஆய்வு பணி தொடங்கி எங்கெங்கு சீமை கருவேல மரங்கள் உள்ளது என்று கண்டுபிடிக்கப்படும். பிறகு பொதுப்பணித்துறை, வருவாய்த்துறை, விவசாயத்துறை உள்ளிட்ட பல்வேறு துறைகள் ஒன்றிணைந்து 15 நாட்களுக்குள் ஏரி, குளங்களில் உள்ள சீமை கருவேல மரங்களை அகற்றும் பணி தொடங்கப்படும். மேலும் இந்த பணி முழுமையாக நடத்தப்படும். மேலும் நீர், நிலைகளில் உள்ள ஆக்கிரமிப்புகள் அகற்றப்படும் என்றார்.

பின்னர் சம்பந்தப்பட்ட அதிகாரிகளை அழைத்து, சீமை கருவேல மரங்களை அகற்றும் பணியை தொடங்குவதற்கான நடவடிக்கைகளை தொடங்க உத்தரவிட்டார்.

ஆய்வு

முருகேசன் (கரூர்):– கருப்பம்பாளையம் பகுதியில் இயங்கி வரும் பிளாஸ்டிக் ஆலைக்கு அனுமதி சான்று வழங்க கூடாது. சுத்திகரிப்பு சாதனம் அமைக்கப்பட்ட சாயப்பட்டறைகள் என்ற பெயர் அளவில் தான் உள்ளது. சாயக்கழிவு நீர் ராஜ வாய்க்கால் வழியாக அடிக்கடி திறந்து விடப்படுகிறது என்றார்.

கலெக்டர்:– ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறினார்.

பள்ளபாளையம் வாய்க்கால் நீரினை பயன்படுத்துவோர் சங்க தலைவர் பழனிசாமி:– பள்ளபாளையம் ராஜ வாய்க்காலில் சாயக்கழிவு நீர் கலப்பதை தடுக்க வேண்டும். அதேபோன்று கரூரை அடுத்த மொச்சக்கொட்டாம்பாளையத்தில் இந்த ஆண்டு நெல் கொள்முதல் நிலையம் அமைக்க வேண்டும் என்றார்.

கலெக்டர்:– நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

இதே போன்று நேற்று நடைபெற்ற குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் விவசாயிகள் பல்வேறு கோரிக்கைகள் வைத்தனர். கோரிக்கைகள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று கலெக்டர் கூறினார்.

கூட்டத்தில் விவசாயிகளின் கோரிக்கைகளை கேட்ட உடன், அந்த கோரிக்கை மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கலெக்டர் முழுவிவரம் கேட்டு, நிறைவேறாவிட்டால், அதிகாரிகளை அழைத்து கோரிக்கைகளை விரைவில் நிறைவேற்ற வேண்டும் என்று உத்தரவிட்டார்.

**வாழைத்தார் விலை உயர்வு விவசாயிகள் மகிழ்ச்சி**



பரமத்தி வேலூர் தினசரி ஏல மார்க்கெட்டில் வாழைத்தார்கள் விலை உயர்ந்து உள்ளதால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்து உள்ளனர்.

வாழைபயிரீடு

நாமக்கல் மாவட்டம் பரமத்தி வேலூர் தாலுகாவில் பரமத்தி வேலூர், பாண்டமங்கலம், நன்செய் இடையார், பொத்தனூர், அணிச்சம்பாளையம், குப்புச்சிபாளையம், ஓலப்பாளையம், எல்லைமேடு உள்ளிட்ட பகுதிகளில் ஏராளமான ஏக்கரில் வாழை பயிர் செய்யப்பட்டு உள்ளது.

இங்கு விளையும் வாழைத்தார்கள் சேலம், திண்டுக்கல், கோவை, ஊட்டி, மதுரை, பழனி, உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களுக்கும், கேரளா,

கர்நாடகா, ஆந்திரா உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களுக்கும் தினந்தோறும் அனுப்பப்பட்டு வருகிறது. மேலும் பரமத்தி வேலூரில் உள்ள மார்க்கெட்டிலும் வாழைத்தார் ஏலம் விடப்பட்டு வருகிறது.

விலைஉயர்வு

சென்ற வாரம் இந்த மார்க்கெட்டில் நடைபெற்ற ஏலத்தில் பூவன் வாழைத்தார் ஒன்று ரூ.250-க்கும், கற்பூரவள்ளி ரூ.300-க்கும், ரஸ்தாலி ரூ.250-க்கும், பச்சை நாடன் வாழைத்தார் ரூ.200-க்கும், மொந்தன் வாழைக்காய் ஒன்று ரூ.4 வீதம் ஏலம் போனது.

நேற்று நடைபெற்ற ஏலத்தில் பூவன் வாழைத்தார் ஒன்று ரூ.300-க்கும், கற்பூரவள்ளி ரூ.350-க்கும், ரஸ்தாலி ரூ.300-க்கும், பச்சை நாடன் வாழைத்தார் ரூ.250-க்கும், மொந்தன் வாழைக்காய் ஒன்று ரூ.6 வீதம் ஏலம்போனது.

விவசாயிகள்மகிழ்ச்சி

தைப்பூச திருவிழாவை முன்னிட்டு வாழைத்தார் விலை உயர்ந்து இருப்பதாக விவசாயிகள் மகிழ்ச்சியுடன் தெரிவித்தனர்.

## தண்ணீர் பற்றாக்குறையை போக்க கல்லணை கால்வாய் பாசன வாய்க்கால்-ஏரிகளை தூர்வார விவசாயிகள் வேண்டுகோள்



தண்ணீர் பற்றாக்குறையை போக்க கல்லணை கால்வாய் பாசன வாய்க்கால் மற்றும் ஏரிகளை தூர்வார விவசாயிகள் வேண்டுகோள்விடுத்துள்ளனர்.

கல்லணைகால்வாய்

புதுக்கோட்டை மாவட்டத்தின் கறம்பக்குடி, ஆலங்குடி, அறந்தாங்கி, ஆவுடையார்கோவில், மணமேல்குடி பகுதிகள் ஒரு காலத்தில் வானம் பார்த்த பூமியாகவே இருந்தன. மழை பெய்தால் மட்டுமே சாகுபடி செய்யும் நிலை இருந்தது. இந்நிலையில் ஆங்கிலேயர்கள் கல்லணையில் இருந்து கடலுக்கு வீணாகச் செல்லும் தண்ணீரை விவசாயத்திற்கு பயன்படுத்த 1935-ல் தொடங்கி 1937-ம்ஆண்டு இப்பகுதிக்கு கல்லணை கால்வாய் பாசன வாய்க்காலை வெட்டினர்.

இந்த வாய்க்கால் மூலம் நாகுடி பிரிவில் இருந்து திருவப்பாடி வாய்க்கால் மூலம் காராவயல் உள்பட 30 ஏரிகளும், புதிய தாய்வாய்க்கால் மூலம் 16 ஏரிகளும், கலக்கமங்கலம் வாய்க்கால் மூலம் 28 ஏரிகளும், மகா கணபதிபுரம் வாய்க்கால் மூலம் 23 ஏரிகளும், சிறுமருதூர் வாய்க்கால் மூலம் 12 ஏரிகளும் நிரம்பி அதன்மூலம் 27 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் பாசனவசதிபெற்றன.

தூர்ந்துபோய்விட்டன

அப்போது கிடைத்த தண்ணீரைக் கொண்டு இப்பகுதி விவசாயிகள் 3 போகம் நெல் சாகுபடி செய்து வந்தனர். இந்நிலையில் வாய்க்கால்கள் தூர்ந்து போய்விட்டன. மேலும் ஏரிகளும் நீரோட்டத்தின் காரணமாகவும், வண்டல் மண் எடுக்க அரசு தடை விதித்ததின் காரணமாகவும் தூர்ந்து போய்விட்டன. இப்பகுதி விவசாயிகள் ஒரு போகம் நெல் சாகுபடி செய்வதற்கே சிரமப்படும் நிலை இருந்தன. மேலும் பலத்த மழை பெய்ததாலும் இப்பகுதியில் உள்ள ஏரிகளான ஆத்தம்பூர், கலக்கமங்கலம், நமரங்கூர், பட்டங்காடு, மும்பாலை, நிலையூர், ஒல்லனூர், காரக்கோட்டை, இடையாத்திமங்கலம் உள்ளிட்ட 20-க்கும் மேற்பட்ட ஏரிகளுக்கு தண்ணீர் செல்லமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் இப்பகுதியை சேர்ந்த விவசாயிகள் கடந்த 4 ஆண்டுகள் நெல் சாகுபடி செய்ய முடியாத நிலை ஏற்பட்டது.

ஆழப்படுத்துவதில்லை

கல்லணை கால்வாய் தூர்ந்து போய் விட்டதால், கல்லணையில் இருந்து வழக்கமான தண்ணீர் திறந்துவிட முடியாத நிலையில் அறந்தாங்கி, ஆவுடையார்கோவில் மற்றும் மணமேல்குடி பகுதியில் ஏரிகளுக்கு தண்ணீர் செல்லாததால், சாகுபடி பாதிக்கப்பட்டு விவசாயிகள் பெரிய

அளவில் இழப்பிற்கு உள்ளாகின்றனர். கல்லணை கால்வாய் பாசன வாய்க்கால் மற்றும் ஏரிகளின் கரைகளை மட்டுமே பொதுப்பணித்துறை பலப்படுத்தும் பணிகளை மேற்கொள்ளும் நிலையில், துூர்ந்து போன மேடான பகுதிகளை ஆழப் படுத்துவதில்லை.

கோரிக்கை

எனவே தமிழக அரசு அறந்தாங்கி, ஆவுடையார்கோவில் மற்றும் மணமேல்குடி பகுதி விவசாயிகளின் வாழ்வாதாரத்தை கருத்தில் கொண்டு, அவர்கள் ஆண்டு தோறும் தண்ணீர் பற்றாக்குறை இல்லாமல் சாகுபடி செய்ய வசதியாக கல்லணை கால்வாய் பாசன வாய்க் கால், பிரிவு வாய்க்கால்கள், ஏரிகளின் கரைகளை பலப்படுத்துவதோடு மேடான பகுதிகளை தூர்வாரி ஆழப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என விவசாயிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

## மேட்டூர் அணையில் இருந்து டெல்டா பாசனத்துக்கு தண்ணீர் திறப்பு குறைப்பு



மேட்டூர் அணையில் இருந்து காவிரி டெல்டா பாசனத்துக்கு வினாடிக்கு 5 ஆயிரம் கனஅடி வீதம் தண்ணீர் திறந்து விடப்பட்டு வந்தது. இந்த நிலையில், பாசனத்துக்கான தண்ணீர் தேவை குறைந்துள்ளதால், நேற்று மாலை 6 மணி முதல் அணையில் இருந்து டெல்டா பாசனத்துக்கு திறந்து விடப்படும் தண்ணீரின் அளவு வினாடிக்கு 3 ஆயிரம் கனஅடியாக குறைக்கப்பட்டுள்ளது. அணைக்கு போதுமான நீர்வரத்து இல்லாத நிலையில், அணையில் இருந்து பாசனத்தேவைக்காக தொடர்ந்து தண்ணீர் திறக்கப்பட்டு வருவதால் அணையின் நீர்மட்டம் வேகமாக குறைந்து வருகிறது. நேற்று நிலவரப்படி அணையின் நீர்மட்டம் 71.96 அடியாக இருந்தது. அணைக்கு வினாடிக்கு 116 கனஅடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது.